**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

**OS.No.13/2008** **Date: 24.11.2025**

**DW4 –** மணி

சாட்சி மனுவின் மீண்டும் முன்னிலையானதின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி:-

நான் ஏற்கனவே 25.06.2025 ல் எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் இன்று எனது கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் குறிப்பிடப்பட்டுள்ள 12.12.1994 தேதியிட்ட பட்டா அசல் பி.வா.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தற்போது சேலம் நீதிமன்றத்தில் சென்ட்ரல் நாசராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது தேவண்ணகவுண்டனூர் கிராம நிர்வாக அலுவலகராக பணிபுரிந்து வரும் சதீஸ்பிரபு எனக்கு உறவினர் என்றால்,சரியல்ல. 10 ம் பிரதிவாதி மேற்படி கிராமத்தில் கிராம உதவியாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டார் என்றால், சரிதான். 25 ம் பிரதிவாதி என் தகப்பனார். அவர் 30.05.2011 ல் இறந்துவிட்டார். அவர் உயிருடன் இருந்தபொழுது எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். பெரியான் என் அப்பாவிற்கு சித்தப்பா. சின்னான் எனக்கு தந்தை வழி தாத்தா. பெரியானும், சின்னானும் உடன்பிறந்த சகோதரர்கள். பெரியான் மகன் சென்னான்(எ) மாணிக்கம் இறந்துவிட்டார் என்றால், தெரியாது. அவர் தற்போது ஊரில் இல்லை. மேற்படி சென்னான்(எ) மாணிக்கம் ஏற்கனவே இதே சொத்தைப் பொறுத்து அ.வ.எண் 382/1987 என்ற எண்ணில் சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, பின்பு சங்ககிரி உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 11/1996 என கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால், சரிதான். அந்த வழக்கில் சென்னான்(எ) மாணிக்கத்திற்கு 1/12 பாகம் 1 ம் அயிட்ட சொத்தில் மட்டும் தீர்ப்பானது என்றால், சரிதான். அந்த வழக்கில் சென்னான்(எ) மாணிக்கம், சின்னானுக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்தை பெரியான் பெயரையும்

பட்டாவில் சேர்த்து வழக்கில் தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றுள்ளார். அந்த தீர்ப்பின்மீது என் தகப்பனார் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். சென்னான்(எ) மாணிக்கம் தனக்கு பிரிந்த 1/12 பாக சொத்தான 35 செண்ட் நிலத்தை 2 ம் பிரதிவாதிக்கு 09.10.1998 ல் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால், எனக்கு தெரியாது. அந்த சொத்து தேசிய நெடுஞ்சாலைக்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. பின்னிட்டு 2 ம் பிரதிவாதி அதே சொத்தை பழனிசாமி, கந்தசாமி, பழனியப்பன் ஆகியோருக்கு விற்பனை செய்து விட்டார் என்றால், சரிதான். அந்த கிரையம் செல்லாது என பரிகாரம் கேட்டு 9 ம் பிரதிவாதி ராமசாமி சேலம் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண் 263/2020 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. தாவா சொத்தில் நான் ஆரம்பம் முதல் சுவாதீனத்தில் இல்லையென்றால், சரியல்ல. என் தாத்தா காலத்தில் இருந்து தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து விவசாயம் செய்து வந்தோம். நான் கடந்த 2024 ல்தான் அந்த சொத்தில் ஒரு தகர கொட்டகை கட்டியுள்ளேன் என்றால், சரிதான். நான் என் தாயாருடன் சங்ககிரி டி.பி. ரோட்டில்தான் குடியிருந்தோம் என்றால், சரிதான். தாவா சொத்தின் ஒரு பகுதியை நெடுஞ்சாலைக்காக நில ஆர்ஜிதம் செய்தபோது எங்களுக்குள் பிரச்சனை இருந்து வந்ததால், நஷ்ட ஈடுத்தொகை முழுவதும் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.20, 24 முதல் 27 வரையிலான ஆவணங்கள் தாவா நிலுவையில் இருக்கும்போது வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.22, 23 பட்டாக்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.14, 15, 16 ஆகியவை வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.16 ல் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். தாவா 1 ம் அயிட்ட சொத்து சின்னானுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என நான் சொல்வது பொய் என்றால், சரியல்ல. அந்த சொத்து சின்னான் மற்றும் பெரியானுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல. அதேபோல் 3 முதல் 12, 41 முதல் 45 பிரதிவாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என

நான் சொல்வதும் பொய் என்றால், சரியல்ல. என் தகப்பனார் இறந்த பின்பு அவரது வாரிசுகளான 41 முதல் 45 பிரதிவாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டோம் என்றால், சரிதான். செந்தில்குமார் மற்றும் ரித்திக்குமார் ஆகியோர் தாவாவிற்கு முக்கிய தரப்பினர் என்று நான் சொல்வது பொய் என்றால், சரியல்ல. இந்த விபரத்தை நான் முதலில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால், சரிதான். செந்தில்குமார், ரித்திக்குமார் ஆகியோர் எனது தகப்பனாரின் வாரிசுகள் இல்லை என்றால், சரியல்ல. அவர்கள் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லையென்றால், சரியல்ல. என் அப்பா பழனியின் வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.

17 முதல் 24, 46 முதல் 52, 66 முதல் 68 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

பி.வா.சா.ஆ.15 ல் தங்கராஜ், தங்காமணி ஆகியோர் இளவராக காட்டப்பட்டுள்ளார் என்றால், சரிதான். மேற்படி நபர்களுக்கு அச்சொத்துக்கள் பூர்வீகமாக பாத்தியப்பட்டவை என்றால், சரிதான். அதனால் பி.வா.சா.ஆ.15 ஆவணம் வீரப்பனை மட்டுந்தான் கட்டுப்படுத்தும் என்றால், சரியல்ல. இளவர் மக்களை கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல. தங்காமணி 17ம் பிரதிவாதி என்றாலும், அவர் இறந்துவிட்டார் என்றாலும், சரிதான். 46 முதல் 52 பிரதிவாதிகள் தங்காமணியின் வாரிசுகள் என்றால், சரிதான். அவர்களுக்கும் பாகம் உள்ளது என்றால்,சரியல்ல.

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லையென்பதால்தான் என் தாத்தா சொத்தை விற்பனை செய்த விபரம் எனக்கு தெரியவில்லை என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.2ன்படி என் தாத்தா 20 செண்ட் காட்டை 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார் என்றால், சரிதான். மேற்படி கிரையத்தை நான் மறைத்து முதல் விசாரணை சாட்சியத்தை அளித்துள்ளேன் என்றால், சரியல்ல. அ.வ.எண் 11/1996 வழக்கில் என் தகப்பனார் தோன்றா தரப்பினராக இருந்துள்ளார் என்றால், சரிதான். அந்த வழக்கின் தீர்ப்பின்படி சென்னான்(எ) மாணிக்கம் அவரது பாக சொத்தை சுவாதீனம் எடுத்துள்ளார்

என்றால், எனக்கு தெரியாது. நாங்கள் சுவாதீனத்தில் இல்லை என்பதால்தான் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை என்றால், சரியல்ல. நெடுஞ்சாலைக்கு நில ஆர்ஜிதம் செய்தபோது என் அப்பாவிற்கும், பெரியப்பா மகன்களுக்கும் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது. அப்போது நாங்கள் சொத்தில் சுவாதீனத்தில் இல்லையென்பதால்தான் எங்களுக்கு இழப்பீடு வழங்கவில்லை என்றால், சரியல்ல. 2ம் பிரதிவாதி சொத்தை கிரையம் வாங்கியதை ஏற்றுக்கொண்டால் நாங்கள் சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்பது தெரிந்துவிடும் என்பதால் நான் அதை மறுக்கிறேன் என்றால், சரியல்ல. தாவா சொத்தில் 13 தென்னை மரங்களும், 5 அல்லது 6 தென்னங்கன்றுகளும் உள்ளது. அவைகள் 2ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால், சரியல்ல. தாவா சொத்தில் வாதியும், 2ம் பிரதிவாதியும்தான் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால், சரியல்ல. வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால், சரியல்ல.

ஒப்பம்/- மணி

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.